©
GOVERNMENT OF TAMIL NADU
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 343] CHENNAI, THURSDAY, DECEMBER 24, 2009
Margazhi 9, Thiruvalluvar Aandu–2040

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

**வருவாய்த் துறை**

**காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டத்தைச் சீரமைத்து ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூரை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் வட்டம் மற்றும் புதிதாக தாம்பரம் வருவாய்க் கோட்டம் உருவாக்குதல் பற்றிய அறிவிக்கை.**

*[அரசாணை (நிலை) எண் 500, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 24 டிசம்பர் 2009.]*

**No. II(2)/REV/712(d-1)/2009.**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், தாம்பரம் குறுவட்டத்தினை சீரமைத்து, **2009–**ஆம் ஆண்டு **டிசம்பர்** திங்கள் **30** ஆம் நாளிலிருந்து, தாம்பரம், சிட்லபாக்கம், மாடம்பாக்கம் ஆகிய குறுவட்டங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வருவாய் கிராமங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

தற்போது தாம்பரம் வட்டம், பள்ளிக்கரணை குறுவட்டத்திலுள்ள மதுரப்பாக்கம், கோவிலாஞ்சேரி, மூலச்சேரி ஆகிய வருவாய் கிராமங்கள் புதிய மாடம்பாக்கம் குறுவட்டத்தில் இணைக்கப்படும்.

**அட்டவணை**

| *வ.எண்* (1) | *குறுவட்டத்தின் பெயர்* (2) | *வருவாய்க் கிராமங்களின் பெயர்* (3) |
|---|---|---|
| **1.** | தாம்பரம் | புலிக்கொரடு<br>கடப்பேரி<br>தாம்பரம்<br>பெருங்களத்தூர்<br>முடிச்சூர்<br>பீர்க்கன்கரணை<br>இரும்புலியூர் |
| **2.** | சிட்லபாக்கம் | திருவஞ்சேரி<br>சேலையூர்<br>சிட்லபாக்கம்<br>செம்பாக்கம்<br>இராஜகீழ்ப்பாக்கம்<br>கௌரிவாக்கம் |
| **3.** | மாடம்பாக்கம் | மாடம்பாக்கம்<br>கஸ்பாபுரம்<br>வெங்கம்பாக்கம்<br>அகரம்தென்<br>கோவிலாஞ்சேரி<br>மதுரப்பாக்கம்<br>மூலச்சேரி |

*[அரசாணை (நிலை) எண் 500, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 24 டிசம்பர் 2009.]*

**No. II(2)/REV/712(d-2)/2009.**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டத்தைப் பிரித்தும் தற்போது தாம்பரம் வட்டத்தில் உள்ள ஆலந்தூர் குறுவட்டத்தினை சீரமைத்து புதிதாக பம்மல், பல்லாவரம் ஆகிய குறுவட்டங்களை உருவாக்கியும் **2009–**ஆம் ஆண்டு **டிசம்பர்** திங்கள் **30** ஆம் நாளிலிருந்து புதிதாக ஆலந்தூர் வட்டமொன்று கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

**2.** புதிதாக உருவாக்கப்படும் ஆலந்தூர் வட்டத்தில் உள்ளடங்கும் **1. ஆலந்தூர், 2. பம்மல், 3. பல்லாவரம்** ஆகிய குறுவட்டங்களுக்கு உட்பட்ட வருவாய்க் கிராமங்கள்மீது தற்போது தாம்பரம் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி ஆலந்தூர் வட்டாட்சியரால் **2009–**ஆம் ஆண்டு **டிசம்பர்** திங்கள் **30** ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

**அட்டவணை**

| *வ.எண்* | *குறுவட்டத்தின்பெயர்* | *வருவாய்க் கிராமங்களின் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | ஆலந்தூர் | மீனம்பாக்கம் |
| | | நந்தம்பாக்கம் |
| | | ஆலந்தூர் |
| | | புனிததோமையார் மலை |
| | | பருத்திவாக்கம் |
| | | ஆதம்பாக்கம் |
| | | பழவந்தாங்கல் |
| | | நங்கநல்லூர் |
| | | தலக்கணாஞ்சேரி |
| 2. | பம்மல் | அனகாபுத்தூர் |
| | | பொழிச்சலூர் |
| | | கவுல்பசார் |
| | | கண்டோன்மெண்ட் பல்லாவரம் |
| | | பம்மல் |
| | | திருநீர்மலை |
| 3. | பல்லாவரம் | திரிசூலம் |
| | | மூவரசம்பட்டு |
| | | நெமிலிச்சேரி |
| | | ஜமீன் பல்லாவரம் |
| | | இசா பல்லாவரம் |
| | | அஸ்தினாபுரம் |

*[அரசாணை (நிலை) எண் 500, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 24 டிசம்பர் 2009.]*

**No. II(2)/REV/712(d-3)/2009.**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டத்தைப் பிரித்தும் தற்போது தாம்பரம் வட்டத்தில் உள்ள சோழிங்கநல்லூர் குறுவட்டத்தினை சீரமைத்து புதிதாக சோழிங்கநல்லூர், மேடவாக்கம் ஆகிய குறுவட்டங்களை உருவாக்கியும், **2009–**ஆம் ஆண்டு **டிசம்பர்** திங்கள் **30** ஆம் நாளிலிருந்து புதிதாக சோழிங்கநல்லூர் வட்டமொன்று கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

**2.** தற்போது தாம்பரம் வட்டம், தாம்பரம் குறுவட்டத்தில் உள்ள வேங்கைவாசல் கிராமம் பிரிவினைக்குப்பின் புதிதாக உருவாக்கப்படும் சோழிங்கநல்லூர் வட்டம், மேடவாக்கம் குறுவட்டத்தில் இணைக்கப்படும். தற்போது தாம்பரம் வட்டம், ஆலந்தூர் குறுவட்டத்தில் உள்ள உள்ளகரம், மடிப்பாக்கம், நன்மங்கலம், கோவிலாம்பாக்கம் ஆகிய கிராமங்கள் புதிதாக உருவாக்கப்படும் சோழிங்கநல்லூர் வட்டம், பள்ளிக்கரணை குறுவட்டத்தில் இணைக்கப்படும்.

**3.** புதிதாக உருவாக்கப்படும் சோழிங்கநல்லூர் வட்டத்தில் உள்ளடங்கும் **1. சோழிங்கநல்லூர், 2. பள்ளிக்கரணை, 3. மேடவாக்கம்** ஆகிய குறுவட்டங்களுக்கு உட்பட்ட வருவாய்க் கிராமங்கள்மீது தற்போது தாம்பரம் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி சோழிங்கநல்லூர் வட்டாட்சியரால் **2009–**ஆம் ஆண்டு **டிசம்பர்** திங்கள் **30** ஆம் நாளிலிருந்து கையாளப்படும்**.**

**அட்டவணை**

**சோழிங்கநல்லூர் வட்டம்**

| *வ. எண்* | *குறுவட்டத்தின் பெயர்.* | *வருவாய் கிராமங்களின் பெயர்* |
|---|---|---|
| (*1*) | (*2*) | (*3*) |
| **1.** | சோழிங்கநல்லூர் | கொட்டிவாக்கம் |
| | | பாலவாக்கம் |
| | | நீலாங்கரை |
| | | ஈஞ்சம்பாக்கம் |
| | | சோழிங்கநல்லூர் |
| | | செம்மஞ்சேரி |
| | | உத்தண்டி |
| **2.** | பள்ளிக்கரணை | உள்ளகரம் |
| | | மடிப்பாக்கம் |
| | | கோவிலாம்பாக்கம் |
| | | நன்மங்கலம் |
| | | பள்ளிக்கரணை |
| | | பெருங்குடி |
| | | சீவரம் |
| | | ஒக்கியம் துரைப்பாக்கம் |
| | | காரப்பாக்கம் |
| **3.** | மேடவாக்கம் | வேங்கைவாசல் |
| | | மேடவாக்கம் |
| | | ஜல்லடியான்பேட்டை |
| | | பெரும்பாக்கம் |
| | | சித்தாலப்பாக்கம் |
| | | ஒட்டியம்பாக்கம் |
| | | அரசன்கழனி |

*[அரசாணை (நிலை) எண் 500, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 24 டிசம்பர் 2009.]*

**No. II(2)/REV/712(d-4)/2009.**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வருவாய் கோட்டத்தினை சீரமைத்து, **2009–**ஆம் ஆண்டு **டிசம்பர்** திங்கள் **30** ஆம் நாளிலிருந்து, தாம்பரம், ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய வட்டங்களை கீழ்காணும் அட்டவணைப்படி புதிய தாம்பரம் வருவாய் கோட்டம் தனது ஆட்சி எல்லைகளாக கொண்டு செயல்படும்**.**

**2.** புதிதாக உருவாக்கப்படும் தாம்பரம் வருவாய் கோட்டத்தில் உள்ளடங்கும் **1. தாம்பரம், 2. ஆலந்தூர், 3. சோழிங்கநல்லூர்** ஆகிய வட்டங்கள் மற்றும் அதற்கு உட்பட்ட உள்வட்டம் மற்றும் வருவாய் கிராமங்கள்மீது தற்போது செங்கல்பட்டு கோட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி தாம்பரம் கோட்டாட்சியரால் 2009–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 ஆம் நாளிலிருந்து கையாளப்படும்**.**

**அட்டவணை**

| *வ.எண்* | *கோட்டம்* | *வட்டம்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **1.** | தாம்பரம் | 1. தாம்பரம் |
| | | 2. ஆலந்தூர் |
| | | 3. சோழிங்கநல்லூர் |

**கி. தனவேல்,**
*அரசுச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU